பதிலை வழங்கியிருக்கிறார்கள் என்றால் இந்தத் திட்டத்தில் ஏதேனும் சிக்கல் இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆகவே, இதைப்பார்த்து, தனிக் கேள்வி போட்டால், அதற்குரிய பதிலைத் தரத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி நதியின் டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டம்.

443—(*வினா எண் 21434) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் காவிரி நதியின் டெல்டா தியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

(இ) மைய அரசு இந்தப் பணிக்கு நிதியுதவி செய்கிறதா.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) இதன் மதிப்பீடு ரூ. 447.00 கோடி ஆகும்.

(இ) மைய அரசின் மூலமாக உலக வங்கியின் நிதி உதவி பெறுவதற்காக திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

வையாவூர் மாம்பட்டு ஏரியில் பிரிவு அணை கட்டும் திட்டம்.

444—*வினா எண் 21723) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி வையாவூர் மாம்பட்டு ஏரியில் நீர் பகிர்ந்து கொடுக்க (Dividing Dam) கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: இந்த ஏர் மதகிலிருந்து 320 அடி தூரத்தில் இரண்டு கண்கள் (Vents) கொண்ட பிரிவு அணை (Dividing Dam) ஒன்று ஏற்கனவே உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, வையாவூர் ஏரியிலிருந்து ஊசிநத்தம், மாம்பட்டு, வையாவூர் ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு கால்வாய் மூலம் தண்ணீர் வருகிறது. அதிலே ஊசிநத்தத்திற்கு தனியாக டிவைடிங் டாம் கட்டி தண்ணீர் தரப்படுகிறது. தற்போது வையாவூர் விவசாயிகளின் நிலத்திற்கு மேல்மாம்பட்டு விவசாயிகளின் நிலம் இருப்பதால், அங்கே விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு நீர் சரியாகக் கிடைப்பது இல்லை. ஆகவே, மாம்பட்டு விவசாயிகளுக்கு நீர் கிடைக்கும் வகையில், வையாவூர் ஏரியில் டிவைடிங் டாம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஊசி நத்தத்தில் உள்ள அணையில் வலது பக்கத்தில் உள்ள தண்ணீர், ஊசிநத்தம் விவசாயிகளுக்கும், இடது பக்கம் உள்ள தண்ணீர் வையாவூர், மாம்பட்டு ஆகிய இடங்களுக்கும் செல்கிறது, அந்த ஏரியில் இருந்து 3 கிராமங்களுக்கு நீர் செல்ல வேண்டியிருப்பதால், அதை 3-பிரிவுகளாகப் பிரித்து, அந்த மூன்று கிராமங்களுக்கும் சரிசமமாக தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 1984-85 ஆம் ஆண்டில் விரிவாக்கம் மற்றும் மேம்பாடு என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் செய்யப் பெறவேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்தப் பணிகள் துவக்கப்படவிருக்கின்றன என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தத் திட்டப் பணிகள் எவ்வளவு காலத்திற்குள் முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அங்கே இரண்டு வென்ட்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த இரண்டு வென்ட்கள் மூலம் 3 கிராமத்திற்குத் தண்ணீர் செல்ல வேண்டியிருப்பதால், பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதால், 3 கிராமங்களுக்கும் சமமாக தண்ணீர் விடுவதற்காக 3 வென்ட்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கும் வகையில், உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 1984-85 ஆம் ஆண்டில் அந்தப் பணிகள் துவக்கப்பட வேண்டும் என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலும் கூடுதலாக எந்தவிதமான விவரமும் சொல்ல முடியாத நிலையில் நான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்த்தாண்டத்தில் செயல்பட்டு வரும் தொழிற்பேட்டை.

445—* வினா எண் 19171—திரு டி. மணி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மார்த்தாண்டத்தில் செயல்பட்டு வந்த தொழிற்பேட்டையில் இப்போதுள்ள தொழில் என்ன ?

(ஆ) கயிறு மெத்தை தயாரிக்கும் தொழில் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் உள்ள மூன்று தொழிற்கூடங்களில், தொழில் நடத்துவோருக்கு இரண்டு கூடங்களும், மற்றொன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிடக் கழகத்திற்கு தானிய சேமிப்புக் கிடங்காகவும் பயன்பட்டு வருகின்றது. காரணம் அப்பொழுது வேறு இடங்களில் இருந்து விண்ணப்பங்கள் வரவில்லை.